**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | SC NO. 11 /2019 |
| Deposition of witness for | : | PW : 2 |
| Name | : | திருமதி.ரஞ்சிதம் |
| Father's / Husband's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **27.11.2024**

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் தற்போது பேரையூர் தாலுகா மங்கள்ரேவு கிராமத்தில் கிராம உதவியாளராக இருந்து வருகிறேன். 14.04.2017 ம் தேதி சுகன்யாவை ஈரோட்டில் அழைத்து வந்து, 15.04.2017 ம் தேதி சுகன்யாவை அதிகாலை 1 மணியளவில் அழைத்துக்கொண்டு போய் யூரியா கலந்த தண்ணியை குடிக்கவைத்து, பெட்ரோல் ஊற்றி சர்வே எண். 7 (ஓடை) எரித்து விட்டதாக ஊரில் பரவலாக பேசிக்கொண்டார்கள். நான் அந்த ஓடைக்குப் போய் பார்த்தேன். அங்கு எரிந்த கம்பியும் சாம்பலும் இருந்தது. கிராம நிர்வாக அலுவரான அமுதாவிடம் வாய்மொழியாக சொன்னேன். அவருடன் நானும் அந்த சம்பவ இடத்திற்கு போனோம். அங்கு எரிந்த கம்பியும் சாம்பலும்

இருந்தது. அங்கிருந்து சேடபட்டி காவல்நிலையத்திற்கு போய் கிராம நிர்வாக அலுவரான அமுதா புகார் கொடுத்தார். அந்த புகாரை கிராம நிர்வாக அலுவரான அமுதா கைப்பட எழுதி கொடுத்தார்கள். போலீசார் விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :</u>

நான் கிராம நிர்வாக அலுவலருடன் காவல் நிலையம் போன அன்றே போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றுக்கொண்டார்கள் என்றால் சரிதான். எந்த எந்த நபர்கள் மூலம் நான் மேற்படி சம்பவத்தை கேள்விபட்டேன் என்ற விபரத்தை போலீசாரிடம் நானும் கிராம நிர்வாக அலுவலரும் சொல்லவில்லை என்றால் சரிதான், ஆஜர் எதிரிகள் அனைவரும் உள்ளூரில் தான் வசித்து வருகிறார்கள். நான் சம்பவத்தை கேள்விபட்டவுடன் அவர்களிடம் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். போலீசாரையும் எதிரிகளின் வீட்டிற்கு கூட்டிப் போகவில்லை என்றால் சரிதான். சம்பவ இடமான ஓடைக்கு அருகில் யாருடைய நிலம் உள்ளது என்ற விபரம் எனக்குத் தெரியாது. சம்பவ இடம் யாருக்கு பாத்தியப்பட்டது என்ற விபரம் போலீசார் என்னிடம் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. எதிரிகளுக்கு உள்ளூரில் சொந்தமாக இடம் உள்ளது. நான் போலீசாரை அழைத்துக்கொண்டு எந்த தேதியில், எத்தனை மணிக்கு சம்பவ இடத்திற்கு போனேம் என்பது ஞாபகம் இல்லை. போலீசார் போட்டோகிராபரை வரவழைத்து புகைப்படம் எதுவும் எடுக்கவில்லை. என்னிடம் எரிக்கப்பட்ட பிரேதம் இருப்பதாகத்தான் நான் கேள்விப்பட்டேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் யார் மூலமாகவும் தகவல் கிடைக்கவில்லை என்றும், அதை நான்கிராம நிர்வாக அலுவலருடன் சம்பவ இடத்திற்கு போய் பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன மாததிரி சொன்ன நேரத்தில் போலீஸ் ஸ்டேசனுக்கு போகவில்லை என்றால் சரியல்ல. போலீசாருக்கு ஆவணம் வேண்டும் என்பதற்காக என்னையும்

கிராம நிர்வாக அலுவலரையும் அழைத்து ஒரு ஆவணத்தை உருவாக்ககிக் கொண்டார்கள் என்றால் சரியல்ல. கிராம நிர்வாக அலுவலர், நான் தான் முதன்முதலாக சம்பவ இடத்திறகு சென்று பார்ததேன் என்பதால் என்னை புகார் கொடுக்குமாறு சொல்லவில்லை என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை